# காரைதீவு மக்கள் ஒன்றியம் - கனடா

## ஒன்று கூடல் 25.06.2011

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் காரைதீவு மக்கள் ஒன்றாய் இணைந்து கடந்த சில ஆண்டுகளாக ஒன்றுகூடல் நிகழ்ச்சியை நடத்தி, எம்மிடையே ஒற்றுமையையும் பரஸ்பர நல்லுணர்வையும் வளர்த்துவருகின்றோம். வழமைபோல் இவ்வாண்டும் ஜூன் மாதம் 25 ஆந் திகதி மார்க்கத்தில் அமைந்துள்ள மிலேனி பூங்கா (**Milne Dam Conservation Park-Markham –(East of McCowan Rd + South of HWY 7)** – மேப்பிள்வியூ பகுதியில் ஒன்றுகூடல் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் சிறுவர், சிறுமியர், வளர்ந்தோர், பெண்கள் ஆகியோருக்கான தனித்தனி விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இப்போட்டிகளில் பெற்றோரும் பிள்ளைகளும் பங்குபற்றி இத்தினத்தைக் குதூகலமாகக் களிப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம். வளர்ந்தோருக்கான போட்டிகள் நிச்சயம் உங்களை மகிழ்வடையச் செய்யும் என்பது எமது நம்பிக்கை. பின்வரும் விளையாட்டுப் போட்டிகளும் அவற்றுக்குரிய பரிசுகளும் உங்களுக்காகக் காத்திருக்கின்றன:.

மிட்டாய் பைஓட்டம், மென்பந்து எறிதல், பழம் பொறுக்குதல், ஓட்டம்,
பலூன் ஊதுதல், பணிஸ் உண்ணல், முட்டி உடைத்தல், கூடைப்பந்து,
சாக்கு ஓட்டம், கால்கட்டி ஓட்டம், நூல் கோர்த்தல், சமநிலை ஓட்டம்,
மெதுவான நடை, கயிறு இழுத்தல் என்பன...

நம் ஊரவர் - உறவினர் எல்லோரும் ஒன்றாக இருந்து, மதிய உணவு உண்டு களித்து, இந்நிகழ்ச்சியைச் சிறப்பிக்குமாறு காரைதீவு மக்கள் எல்லோரையும் வருக வருக என காரைதீவு மக்கள் ஒன்றிய நிர்வாக சபையினராகிய நாங்கள் வரவேற்கிறோம்.

ஒன்றாய்க் கூடுவோம் ஒற்றமையை வளர்த்திடுவோம்

உறவை வளர்ப்போம் உயர்வாய் வாழ்ந்திடுமோம்.

காரைதீவு ஒன்றிய நிர்வாகசபை உறுப்பினர்

நன்றி வணக்கம்